**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.198/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பவித்ரா | Prosecution | P.W-1, L.W-1 |
| Father Name | ரஞ்சித் | Defence | |
| Village | சிவனார்விளாகம்,சிர்காழீ | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 25 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சென்னையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கணவர் ஆவார். கடந்த 11.01.2023 அன்று மதியம் 12.30 மணிக்கு நான் எனது அம்மா வீட்டில் இருந்து எனது கணவர் வீட்டிற்கு நான் என் அம்மா என் மகளின் அத்தை மற்றும் அத்தை மகன் மனோஜ் ஆகியோர் சென்றோம். என் கணவர் வீட்டில் இருந்த என் மாமனார் மாமியார் என் நாத்தனார் மூவரும் வீட்டை பூட்டி கொண்டு உள்ளே செல்ல அனுமதி கொடுக்கவில்லை. நான் வெளியில் நின்று கொண்டு இருந்தேன். என் கணவரின் சகோதரி என் கணவருக்கு போன் மூலம் தகவல் சொல்லி வீட்டிற்கு வந்த என் கணவர் என் தலை முடியை பிடித்து இழுத்து எந்த காரணம் என்று கேட்காமல் என்னை அடித்தார். என் கணவருடன் இருந்த என் மாமனார் மாமியார் என் நாத்தனார் மற்றும் என் கணவரின் சகோரதாரர் நால்வரும் என்னை அடித்தார்கள். புடவையை பிடித்து இழுத்து அடித்தார்கள். ராகுல் கத்தியை எடுத்து குத்தவந்தார். கழியால் அனைவரும் என்னை அடித்தார்கள். என் கணவரின் சகோதாரி கையை கடித்து வைத்து விட்டார். தலையில் அடித்து தலை வீங்கிவிட்டது இடது கை விரல் முறிந்தது போல் ஆகிவிட்டது. இடது கையில் கட்டையால் அடித்து கிழிந்த காயம் காணப்பட்டது. கணவரின் சகோதாரி கழுத்தில் இருந்த தாலி மற்றும் செயின்னை பிடித்து இழுத்ததில் எனது கழுத்தில் காயம் ஏற்ப்பட்டது. என் மாமனார் மாமியார் காலில் கால்லால் அடித்து கால் வீங்கிவிட்டது. நான் மயங்கிவிட்டேன். என் தலை முடியை பிடித்து ரோடு வரை இழுத்து வந்தார்கள். என்னை அனைவரும் தேவுடியா குச்சிகாரி என்று காமகுரோதமான வார்த்தைகளால் என்னை திட்டினார்கள்.

என் அம்மாவும் என் அத்தை மகன் மனோஜ் இருவரும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் அங்கு சீர்காழி போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும் போலிசார் எனக்கு படித்துக்காட்டினார்கள். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகு குறியீடு செய்யப்படுகிறது. மேல்சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் அங்கு நான் 7 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின்னிட்டு இரண்டு நாட்கள் கழித்து 20.01.2023 இரவு 12.30 மணிக்கு க.செந்தில், பாலகிருஷ்ணன்னா பாலமுருகான என்று சரியாக தெரியவில்லை உடன் இரண்டு காவலர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து விசாரணைக்கு அழைத்தார்கள் பெண் காவலர் இல்லையா என்று நான் கேட்டதற்கு நீ அதிகமாக வாய் பேசுகிறாய் என்று கூறி என்னையும் என் தம்பியையும் மற்றும் என் அம்மாவையும் வண்டியில் ஏற சொல்லிவிட்டு வண்டியில் இருந்து என்னையும் என் அம்மாவையும் செந்தில் என்ற சீர்காழி போலீஸ் வண்டியில் இருந்து கீழே தள்ளிவிட்டு என் தம்பியை மட்டும் சட்டை இல்லமால் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டார்கள். 21.01.2023 தேதி மாலை எனக்கு போன் செய்து என் மீது வழக்கு போட்டுவிட்டோம் நீதிமனறத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று செந்தில் என்ற போலீசார் சொல்லிவிட்டார். நான் என் மாமியார் மாமனார் நாத்தனார் எனது கணவர் மற்றும் என் கணவரின் சகோதாரர் ஆகியோர் மீது புகார் கொடுத்தேன் எதற்காக என் மாமியார் மற்றும் நாத்தனார் மீது வழக்கு பதிவு செய்யவில்லை என்று காரணம் தெரிவிக்கமலே எங்கள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து விட்டார்கள். இதை நான் காவல் கண்காணிப்பாளர் மற்றும் மகளிர் ஆணைத்திற்கும் மற்றும் சென்னை தலைமை செயலகத்திற்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் பல முறை புகார் அளித்து உள்ளேன். இது வரை விசாரித்து எந்த நடவடிக்கைம் மேற்கொள்ளவில்லை. நான் புகார் அளித்த 5 நபர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.198/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | லதா | Prosecution | P.W-2, L.W-2 |
| Husband Name | பாஸ்கர் | Defence | |
| Village | காளி செட்டிதோப்பு | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 47 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மருமகன் ஆவார். கடந்த 11.01.2023 அன்று மதியம் 12.30 மணிக்கு என் மகளை அழைத்து கொண்டு நான் என் மகளின் அத்தை மற்றும் என் மகளின் அத்தை மகன் மனோஜ் ஆகியோர் சென்றோம். என் மகளை என் மகளின் மாமனார் மாமியார் மற்றும் நாத்தனார் ஆகியோர் அடித்தார்கள். முடியை இழுத்து போட்டு என் மகளின் மாமனார் என்னை அடித்தார். என் மருமகன் வந்த பின்னிட்டு நாங்கள் செல்கிறோம் என்று என் மகள் சொன்னார் என் மருமகன் வந்து எந்த விவரமும் கேட்காமல் என் மகளை கட்டையால் சரமாரியாக அடித்தார். என் மருமகனின் தம்பி ராகுல் நாத்தனார் ரஞ்சனி மற்றும் என் மருமகன் என் மகளின் மாமியார் மாமனார் ஆகியோர் சேர்ந்து அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். என் மகளை அவரது நாத்தனார் கையில் கடித்து விட்டார். என் மகளுக்கு கை விரலிலும் கையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. நானும் மனோஜ் சிகிச்சைக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.198/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மாரியம்மாள் | Prosecution | P.W-3, L.W-3 |
| Husband Name | செல்வம் | Defence | |
| Village | காளி செட்டிதோப்பு | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 40 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 11.01.2023 அன்று மதியம் 12.30 மணிக்கு என் அண்ணன் மகள் அ.சா.1 னை அழைத்து கொண்டு நான் என் அண்ணி, என் மகன் மனோஜ் ஆகியோர் எதிரிகள் வீட்டிற்கு சென்றோம். நான் பொங்கல் வருது என்று என் அண்ணன் மகளை அவர் கணவர் வீட்டில் விட சென்றோம். அவர்கள் வீட்டில் உள்ளவர்களான என் அண்ணன் மகளின் மாமனார் மாமியார் மற்றும் நாத்தனார் ஆகியோர் அடித்தார்கள். முடியை இழுத்து போட்டு என் அண்ணன் மகளின் மாமனார் அடித்தார். குடும்பத்திற்குள் பிரச்சனை செய்கிறார்கள் என்று நாங்கள் விலகி இருந்தோம் என் அண்ணன் மகளை அதிகமாக அடித்ததால் என் அண்ணி சென்று விலக்கினார். ரஞ்சனி என்பவர் அவர் அண்ணனுக்கு போன் மூலம் தகவல் சொல்லி அ.சா.1 ன் கணவர் வீட்டிற்கு வந்ததும் எந்த விவரமும் கேட்காமல் என் அண்ணன் மகளை கட்டையால் சரமாரியாக அடித்தார். என் அண்ணன் மருமகனின் தம்பி ராகுல் நாத்தனார் ரஞ்சனி மற்றும் என் அண்ணன் மருமகன் என் அண்ணன் மகளின் மாமியார் மாமனார் ஆகியோர் சேர்ந்து அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். என் அண்ணன் மகளை அவரது நாத்தனார் கையில் கடித்து விட்டார். என் அண்ணன் மகளுக்கு கை விரலிலும் கையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. என் அண்ணியும் என் மகன் மனோஜ் ஆகியோர் சிகிச்சைக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு**

**விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**
**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.198/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மனோஜ் | Prosecution | P.W-4, L.W-4 |
| Father Name | செல்வம் | Defence | |
| Village | காளி செட்டிதோப்பு | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 21 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து படித்து கொண்டு இருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 11.01.2023 அன்று மதியம் 12.00 மணிக்கு என் மாமன் மகளை அழைத்து கொண்டு நான் என் அம்மா என் அத்தை ஆகியோர் பொங்கல் வருது என்று என் மாமன் மகளை அவர் கணவர் வீட்டில் விட சென்றோம். அவர்கள் வீட்டில் உள்ளவர்களான என் மாமன் மகளின் மாமனார் மாமியார் மற்றும் நாத்தனார் ஆகியோர் அடித்தார்கள். முடியை இழுத்து போட்டு என் மாமன் மகளின் மாமனார் அடித்தார். குடும்பத்திற்குள் பிரச்சனை செய்கிறார்கள் என்று நாங்கள் விலகி இருந்தோம் என் மாமன் மகளை அதிகமாக அடித்ததால் என் அத்தை சென்று விலக்கினார். ரஞ்சனி என்பவர் அவர் அண்ணனுக்கு போன் மூலம் தகவல் சொல்லி அ.சா.1 ன் கணவர் வீட்டிற்கு வந்ததும் எந்த விவரமும் கேட்காமல் என் மாமன் மகளை கட்டையால் சரமாரியாக அடித்தார். என் மாமன் மருமகனின் தம்பி ராகுல் நாத்தனார் ரஞ்சனி கட்டை எடுத்து கொடுத்து அடிக்க சொன்னார் மற்றும் என் மாமன் மருமகன் என் மாமன் மகளின் மாமியார் மாமனார் ஆகியோர் சேர்ந்து அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். என் மாமன் மகளை அவரது நாத்தனார் கையில் கடித்து விட்டார். என் மாமன் மகளுக்கு கை விரலிலும் கையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. நான் என் அத்தையும் சிகிச்சைக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனக்கு இருதயம் பலவீனம்மாக உள்ளதால் என்னால் தடுக்க இயலவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது. மறு விசாரணை இல்லை.**